வருச நாட்டிலிருந்து ஸ்ரீவில்லிபுத்தூருக்கும், நீலகிரி மாவட்டத்திலே, சிரியலூர் புதுப்பட்டிக்கும், நாமக்கல் மாவட்டத்தில் முள்ளுக்குறிச்சி நரியங்காட்டிற்கும், திருச்சி மாவட்டத்தில் புளியஞ்சோலைக்கும், பலாத்தூர்பட்டிக்கும் என்று 5 திட்டங்கள் 5 இடங்களுக்கு அறிவிக்கப்பட்டிருக்கின்றன. இதுவரை 15 கருத்துருக்களை அங்கே அனுப்பியிருக்கிறோம். 1980 ஆம் ஆண்டின் வனப் பாதுகாப்புச் சட்டம் அவ்வளவு கடுமையாக இருக்கிறது. வனங்கள் அழிக்கப்படக் கூடாது, வனங்கள் பாதுக்காக்கப்பட வேண்டும் என்பதற்காக இவ்வளவு திட்டங்களைத் தீட்டியிருக்கிறார்கள். இருந்தாலும்கூட, மாண்புமிகு தலைவர் கலைஞர் அவர்களுடைய அரசு 5-வது முறையாக பொறுப்பேற்றதற்குப் பிறகு, முக்கியத்துவத்தைக் கருதி, பல இடங்களிலே அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. இதுவரை 43 இடங்களிலே, 266 கிலோ மீட்டர் சாலை அமைப்பதற்கு, மற்ற துறைகளுக்கெல்லாம் நாங்கள் அனுமதி வழங்கியிருக்கிறோம் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 109, மாண்புமிகு உறுப்பினர் திரு டி. இராமச்சந்திரன், மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

109—

உண்டி உறைவிடப் பள்ளி

***31084—திரு டி. இராமச்சந்திரன்:**

மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தளி தொகுதி, மஞ்சுகொண்டப்பள்ளி மற்றும் தொட்டமஞ்சி ஆகிய ஊர்களில் பழங்குடியின மாணவர்களுக்கு உண்டி உறைவிடப் பள்ளி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

அ) மற்றும் ஆ) தளி தொகுதி, மஞ்சுகொண்டப்பள்ளி மற்றும் தொட்டமஞ்சி ஆகிய இடங்களை ஒருங்கிணைத்து, பெட்டமுகிலாளம்

2009 ஜூலை 9]

பகுதியில் ஒரு உண்டி உறைவிடப் பள்ளியை அமைப்பதற்கான செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு டி. இராமச்சந்திரன் அவர்கள்.

திரு டி. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிருஷ்ணகிரி மாவட்டம், என்னுடைய தளி தொகுதியில், மஞ்சுகொண்டப்பள்ளி ஊராட்சியில், மஞ்சுகொண்டப்பள்ளி, பேவல்பட்டி, கஸ்தூர், பஸ்வனபுரம், காவிரிபுரம் என 15-க்கும் மேற்பட்ட மலைக் கிராமங்கள் உள்ளன. 2,500-க்கும் மேற்பட்ட மக்கள் அங்கே வசிக்கின்றனர். அதிலே, 500-க்கும் மேற்பட்ட பழங்குடியின மக்கள் வசிக்கின்றனர். அதேபோல, தொட்டமஞ்சி ஊராட்சியில், தொட்டமஞ்சி, சிக்க மஞ்சி, கொடகரை, கெம்பகரை, பெல்லட்டி, பிலிகுண்டு போன்ற 20 மலைக் கிராமங்களில் 1,000-க்கும் மேற்பட்ட பழங்குடியின மக்கள் வசிக்கின்றனர். கல்வியிலும், பொருளாதாரத்திலும் பின்தங்கியுள்ள பழங்குடியின மக்களுடைய கல்வி பயில்வோரின் எண்ணிக்கை மிகவும் குறைவாக உள்ளது. Drop out எனப்படும், பள்ளியிலே இடையிலே நிற்கின்ற மாணவர்களின் எண்ணிக்கை அதிகமாக உள்ளது. ஆகவே, பழங்குடியின மக்களுடைய குழந்தைகள் கல்வி கற்கும் வகையிலே, மஞ்சுகொண்டப்பள்ளி மற்றும் தொட்டமஞ்சி கிராமங்களில் உண்டி உறைவிடப் பள்ளிகளை அமைக்க அரசு முன்வருமா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-25

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தளி சட்டமன்றத் தொகுதியில், பெட்டமுகிலாளம் என்ற இடத்தில் பழங்குடியின மாணவர்களுக்கு உண்டி உறைவிடப் பள்ளியை ஏற்படுத்தலாம் என கிருஷ்ணகிரி மாவட்ட ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் அவர்கள் அரசுக்கு முன்மொழிவைச் சமர்ப்பித்துள்ளார்கள். அந்த இடத்தில் ஆரம்பப் பள்ளி அமைத்தால், பள்ளி செல்லும் வயதிலே எத்தனைக் குழந்தைகள் இப்பள்ளியில் கல்வி பயில முன்வருவார்கள் என்றும், சுற்று வட்டாரத்தில் எத்தனை கிலோ மீட்டர் தூரத்தில் வேறு பள்ளிகள் அமைந்திருக்கின்றன என்பதையும், பள்ளிக் கட்டடம் கட்டுவதற்குத் தேவையான இட வசதி இருக்கிறதா என்பதையும் பற்றி ஆதி திராவிடர்

மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் அவர்களிடம் கருத்துரு கேட்கப்பட்டிருக்கிறது. அந்தக் கருத்துரு வரப்பெற்றவுடன், அந்த இடத்தில் ஆரம்பப் பள்ளி அமைப்பதற்கான உரிய மேல் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. இராமச்சந்திரன்.

திரு. டி. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் சொல்கின்ற பெட்டமுகிலாளத்திற்கும், மஞ்சுகொண்டப்பள்ளிக்கும் 70 கிலோ மீட்டர் தூரம் உள்ளது. அதேபோல தொட்டமஞ்சியிலிருந்து பெட்டமுகிலாளம் என்பது 50 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ளது. குழந்தைகள் இரண்டு, மூன்று பேருந்துகள் மாறி 50 கிலோ மீட்டர் தூரம் சென்று பெட்டமுகிலாளம் உண்டி உறைவிடப் பள்ளியில் படிப்பது என்பது சாத்தியம் இல்லை. இந்த இரண்டு ஊராட்சிகளிலும் பழங்குடியின மக்களுடைய எண்ணிக்கை அதிகமாக உள்ளது. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்து, இந்த இரண்டு இடங்களிலும் உண்டி உறைவிடப் பள்ளிகளை அமைப்பதோடு, மாநிலத்தில் மொத்தம் எத்தனை உண்டி உறைவிடப் பள்ளிகள் உள்ளன? அவற்றில் மொத்தம் எத்தனை மாணவர்கள் படிக்கிறார்கள் என்பதையும் மாண்புமிகு அமைச்சரிடம் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொல்கின்ற இடத்திலிருந்து சில அறிக்கைகள், விவரங்களைக் கேட்டிருக்கின்றோம். அந்த விவரங்கள் வரப்பெற்றவுடன், அந்த இடத்தில் உண்டி உறைவிடப் பள்ளி ஆரம்பிப்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எத்தனை உண்டி உறைவிடப் பள்ளிகள் இருக்கின்றன என்று கேட்டார்கள். தமிழகத்தில் மட்டும் 293 உண்டி உறைவிடப் பள்ளிகள் இருக்கின்றன. அவற்றில் 36,917 மாணவ, மாணவிகள் பயின்று வருகிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 110, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஜெயபால், மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்கள்.